

கழக மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் தாயார் மறைந்த ஏ.கே.எஸ். சுப்பம்மாள் அம்மையாரின் நினைவேந்தல் நிகழ்வில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று அம்மையாரின் திருஉருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் சு.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன் , ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பாலஞானவேல், இரா.மனோகரன் உள்ளிட்ட மாநில மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக, வார்டு கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

### வேலூர் மாவட்டம் – காட்பாடி வட்டம்

# சேனூர் கிளைக் கழகச் செயலாளர் பஞ்சாட்சரம் இல்லத் திருமணம்!

## கழக பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் துரைமுருகன் நடத்தி வைக்கிறார்!

வேலூர், செப். 2 -

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் சேனூர் கிளைகழக செயலாளர் பஞ்சாட்சரம்இல்ல திருமணத்தை கழக பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் துரைமுருகன் நடத்தி வைக்கிறார். காட்பாடி சேனூர் கிளை கழக செயலாளர் எஸ். பி.பஞ்சாட்சரம் சுமதி ஆகியோரின் மகன் அஜித்துக்கும், உண்ணாமலை சமுத்திரம் ரமேஷ் கண்ணம்மாள் மகள் சுவேதா திருமணம் செப். 7ந் தேதி



(திங்கட்கிழமை) காலை 6.30 மணிக்கு கரசமங்கலம் கூட்ரோடு துளசிபெருமாள் திருமண மண்டபத்தில் நடக்கிறது.

திருமணத்தை கழக பொது செயலாளர் முன்னாள் நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நடத்தி வைக்கிறார்.

திருமண நிகழ்ச்சியில் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர் ஆனந்த், தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார், மாவட்ட அவைத் தலைவர் தி.அ. முகமது சகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன், கழக புரவலர் துரை சிங்காரம், தெற்கு மாவட்ட பொருளாளர் சி. நரசிம்மன், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் எஸ். சரவணன் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

திருமண நிகழ்ச்சி ஏற்பாடுகளை சேனூர் கூட்டுறவு நகரமைப்பு துணைத் தலைவர் எஸ். டி. அசோகன் - பிரேமா தம்பதியினர் செய்துள்ளனர்.

### மஹாராஷ்டிராவில் கொடூரம்: தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த நபரைத் தாக்கி

# சாணம் தின்ன வைத்த ‘ஹிந்துத்துவ பசுக்காவலர்கள்’ என்ற குண்டர்கள்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கடும் கண்டனம்!

சென்னை, செப்.2

மகாராஷ்டிராவில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த நபரைத் தாக்கி சாணம் தின்ன வைத்த ‘ஹிந்துத்துவப் பசுக் காவலர்கள் என்ற குண்டர்கள்’ சான்றுகள் இருந்தும் குற்றவாளிகளை கைதுசெய்யப் பா.ஜ.க. அரசு தயங்குவதா?



மனித மாண்புகளைச் சிதைக்கும் ஜாதிமதப் போக்கை ஒழித்துக் கட்ட வேண்டாமா? என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

மகாராட்டிர மாநிலம் ஜால்னா மாவட்டத்தில், பசுப் பாதுகாப்பு அமைப்பு என்ற பெயரால் குவிந்த குண்டர்கள், ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரைத் தாக்கி, சாணத்தைத் தின்ன வைத்த கொடுமை பெரும் அதிர்ச்சி தரத் தக்கதாகும்!

சரக்கு வாகன ஓட்டுநரான பரமேஸ்வர் சுகாஸ் ஹிவாலே என்பவர் வைத்திருந்த காளை மாட்டை தன் உறவினர் ஒருவரிடம் விற்றுவிட்டு, அதனை அவர் வீட்டில் கொண்டுபோய் விட ஜால்னா நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வழியில் பஜ்ரங் தள் அமைப்பினரும், பசுப் பாதுகாவலர்கள் என்று கூறிக்கொண்டவர்களுமாக ஆறு பேர் கொண்ட கும்பல் இவர்களது வாகனத்தை மறித்துள்ளது.

**ஜாதிய ரீதியாக இழிவுபடுத்தியுள்ளனர்!**

சட்டப்பூர்வமாக காளையை வீட்டுப் பயன்பாட்டிற்கு வாங்கப்பட்டதற்கான ஆவணங்களைக் காண்பித்தும், அதை ஏற்றுக்கொள்ளாத அக்கும்பல், அவரை கடுமையாகத் தாக்கியுள்ளது. அவரது ஜாதியைக் கேட்டு, ஜாதிய ரீதியாக இழிவுபடுத்தியுள்ளனர்.

தாக்குதலின் உச்சமாக, வாகனத்திலிருந்த மாட்டின் சாணத்தை எடுத்து ஹிவாலேவின் வாயில் கட்டாயப்படுத்தித் திணித்துள்ளனர். அவரின் 11 வயது மகனுக்கும் சாணத்தை ஊட்ட முயன்றபோது ஹிவாலே அதைத் தடுத்துள்ளார். மேலும், உடன் வந்த காம்ப்ளேவையும் தாக்கி, வாகனத்தையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த மே மாதம் நடந்துள்ள நிலையில், அச்சம் காரணமாகக் காவல்துறையை அணுகாமல் இருந்துவிட்டனர். ஆனால், இத் தாக்குதல் குறித்த காணொலி இணையத்தில் பரவியதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட ஹிவாலே அண்மையில் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

**புகாரைப் பதிவு செய்யாமல் தவிர்த்த காவல்துறையினர்!**

ஆரம்பத்தில் இப் புகாரை ஏற்க காவல்துறையினர் மறுத்துள்ளனர். ‘உங்களுக்குள் உள்ள பிரச்சினையை ஏன் காவல் நிலையம் வரை இழுக்கிறீர்கள் என்று கூறியும், இது எங்கள் காவல் எல்லைக்குள் வராது’ என்று கூறியும் புகாரைப் பதிவு செய்யாமல் தவிர்த்துள்ளனர். இந்த நிலையில் இக்கொடூர நிகழ்வு சமூக வலைதளங்களில் அதிகமாகப் பரவியதும் வேறு வழியின்றி காவல்துறை புகாரைப் பதிவு செய்துள்ளது.

இப் புகாரின் அடிப்படையில், ஜால்னா தாலுகா காவல் துறையினர் அடையாளம் தெரியாத ஆறு பேர் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். காணொலியில் தொடர்புடைய நபர்களின் முகம், தெளிவாக தெரிந்த நிலையிலும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்று நேற்று முன்தினம் ஓர் ஆங்கில (தி ஹிந்து) ஏட்டில் வெளிவந்துள்ள செய்து கூறுகிறது.

**நாகரிக சமூகமா? சுதந்திர நாடா?**

இது 21 ஆம் நூற்றாண்டு! இந்தியா சுதந்திரம் அடைந்ததாகச் சொல்லப்பட்டு 80 ஆண்டுகளும் ஆகி, கொண்டாட்டங்களுக்கும் குறைச்சலில்லை. ஆனால், சக மனிதர் ஒருவரை, அவர் ஜாதியைக் காரணம் காட்டி ஒரு கும்பல், சாணியைத் தின்ன வைக்கிறது, வாயில் திணிக்கிறது, வன்கொடுமையில் ஈடுபடுகிறது என்றால், இது நாகரிக சமூகமா? சுதந்திர நாடா?

“பசுப் பாதுகாப்பு” என்ற பெயரால் நாட்டில் நடக்கும் கொடுமைகளுக்கு அளவில்லாமல் தொடர்கிறது. உத்தரப் பிரதேசத்தில் மாட்டுக்கறியை வீட்டில் வைத்திருந்ததாகக் கூறி, அக்லக் என்ற முதியவர் கொல்லப்பட்டது முதல் வடபுலத்தின் பல மாநிலங்களிலும் இத்தகைய கொடுமைகள் அரங்கேறுகின்றன.

**மதவெறியும் இணைந்து ஆட்டம் போடுகிறது!**

அதிலும், சமூகப் புரட்சியாளர்கள் ஜோதிபாபூலே - சாவித்திரிபாய் பூலே சாகுமகராஜ் பாபாசாகேப் அம்பேத்கர் பிறந்த மண்ணில் இன்று பதவியைப் பிடித்திருக்கும் பா.ஜ.க.வின் ஆட்சிக் காலத்தில், ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்ததும், அவர் வாயில் மாட்டுச் சாணத்தைத் திணித்து உண்ணச் சொல்லும் ஜாதி வெறி இன்னமும் அடங்கவில்லையே! அது மதவெறியுடன் இணைந்து ஆட்டம் போடுகிறதே!

இந்தக் கொடுமையைக் கண்டு நம் குருதி கொதிக்கவில்லையா? நூறு ஆண்டுகளுக்கு முன்பே, சாணிப் பாலையும், சவுக்கடியையும் ஒழிக்கப் போராடி, மனித சமத்துவத்துக்காகக் குரல் கொடுத்த சுயமரியாதை இயக்கமும், முற்போக்குச் சிந்தனையாளர்களும் வளர்த்த அந்த மண்ணில், இன்னமும் ஆங்காங்கே ஜாதியின் பெயரால் ஆணவக் கொலைகளும், கும்பல் கொலைகளும், வன்முறைகளும், வன்கொடுமைகளும் நடப்பதை எதிர்த்து நாம் அன்றாடம் மக்கள் மன்றத்திலும், சட்ட ரீதியாகவும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

**அங்கு நடப்பது சட்டத்தின் ஆட்சியா? ஸநாதனத்தின் ஆட்சியா?**

ஆனால், மகாராட்டிரத்தில், இக் கொடுமைகளை இழைத்தவர்களைக் கைது செய்யக் கூட இன்னும் அம் மாநிலக் காவல்துறை தயங்குகிறது என்றால், அங்கு நடப்பது சட்டத்தின் ஆட்சியா? ஸநாதனத்தின் ஆட்சியா?

பா.ஜ.க.வோ, அல்லது அமெரிக்காவில் போய் இதோபதேசம் செய்யும் ஆர்.எஸ்.எஸ்.சோ இந்தக் கொடுமைகளைத் தடுக்க, எதிர்க்க முன்வருமா? இந்தக் குண்டர்களுக்குப் பின்னணியில் இருப்பது யாரென்பதை உலகம் அறியுமே!

மனித மாண்புகளையும், விழுமியங்களையும் சிதைக்கும், ஜாதி - மத வெறியர்களின் இக் கொடுமைகளை ஒழிக்க உறுதிபூணுவோம். இந் நாட்டை ஜாதி ஒழிந்த நாடாக மாற்றும் வரை, நமக்கு ஓய்வில்லை, சாய்வில்லை!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மாற்றுத்திறனாளிகள் மானிய கோரிக்கையில் ஏமாற்றம்!

# மாற்றுத்திறனாளிகளுக்கான ஆக்கப்பூர்வமான திட்டங்கள் ஏதுமில்லை !

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவர் ரெ. தங்கம் கண்டனம்!

சென்னை, செப்.2

மாற்றுத்திறனாளிகள் மானிய கோரிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் ஏதும் அறிவிக்கவில்லை என மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறளிகள் முன்னேற் சங்க மாநிலத் தலைவர் ரெ. தங்கம் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்!

அவரது அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலம் தொட்டு முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் முதலமைச்சராக பொறுப்பு வகித்த நாள் வரை மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு ஏராளமான திட்டங்களை மாற்றுத்திறனாளிக்கு வாரி வழங்கி அவர்களின் கண்ணீரை துடைத்தனர்.

ஆனால், புதிதாக பொறுப்பேற்ற முதலமைச்சர் ஜோசப் விஜய் சட்டசபையில், மாற்றுத்திறனாளிக்கான மானிய கோரிக்கையில் நீண்ட நாள் கோரிக்கையான மாதாந்திர உதவித் தொகை ரூ.5000/ உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றவில்லை என்பதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

கீழ்க்கண்ட கோரிக்கைகளை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களை கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட ஒட்டுமொத்த மாற்றுத் திறனாளிகள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

கோரிக்கை 1.

அரசுத் துறையில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களின் உடல் உபாதைகள் காரணமாக இயற்கை சீற்றங்களால் தொடர் அடை மழை,புயல் வெள்ளம் மற்றும் அக்னி வெயில் உள்ளிட்ட கடும் பாதிப்புகளின் போது மாற்றுத்திறனாளிகள் தங்களது இணைப்புச் சக்கர வாகனம் மற்றும் பேருந்துகளில் ஏறி இறங்கி அலுவலகம் சென்று வர மிகவும் அவதிப்படுகின்றனர். இதனால் இயற்கை சீற்றங்களால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்க்கும் விதமாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள 12 நாட்கள் (CL) தற்செயல் விடுப்புடன் சேர்த்து கூடுதலாக 15 நாட்கள் (12+15=27) (27 CL) நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கிடவும்.

கோரிக்கை 2 :

மாற்றுத்திறனாளிகள் அரசுப் பணியில் சேர அரசு விதிகளின்படி 10 ஆண்டுகள் வயது தளர்வு ( அரசு பணியில் சேர 45 வயது வரை) வழங்கப்படுகிறது. இதனால் பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் வயது சலுகை காரணமாக, மாற்றுத்திறனாளிகள் காலம் கடந்து 47, 47, 48 வயதுகளில் அரசு பணியில் சேரும்போது அவர்களின் பணிக்காலம் சுமார் 13 ஆண்டுகள் மட்டுமே பணியாற்றக்கூடிய சூழல் ஏற்படுகிறது.

இதனால், அவர்களுக்கு ஓய்வூதியம் பங்களிப்பை கணக்கிடும்போது மிகவும் அதிக பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மாற்றுத்திறனாளிகள் அரசு துறைகளில் 15 ஆண்டுகள் பணிபுரிந்தால் அவர்களுக்கு முழு ஓய்வூதிய பங்களிப்பை வழங்கிட வேண்டும்,

மேலும் அவர்களுக்கு குறுகிய பணி காலம் இருப்பதால், அவர்களின் குடும்ப நலன் கருதி பணி ஓய்வு பெறும் வயதினை 65ஆக நிர்ணயம் செய்து உயர்த்த வேண்டும்.

கோரிக்கை 3 :

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை ரூ.5000/_ ஆக உயர்த்தி வழங்க மானியக் கோரிக்கையில் வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது .

கோரிக்கை 4:

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக வீடு ஒதுக்கீடு செய்து வழங்கிட வேண்டும், மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வீடுகளுக்கு எளிதாக அணுக கூடிய கட்டமைப்பு ஏற்படுத்தி உறுதி செய்ய மானிய கோரிக்கையில் வலியுறுத்த வேண்டுகிறேன். (கைப்பிடியிடும் கூடிய சாய் தளம் டாட் டைல்ஸ் அமைத்தல்)

கோரிக்கை 5:

மீனவர்களின் விசைப்பாடுகளுக்கு அரசு மானிய விலையில் டீசல், பெட்ரோல் வழங்குவது போல இணைப்பு சக்கர ஸ்கூட்டி மற்றும் கார்கள் பயன்படுத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்கிட வலியுறுத்துகிறோம்.

கோரிக்கை 7 .

தமிழ்நாடு ஹோட்டல்களில் மாற்றுத்திறனாளிகள் தங்கிட தற்போது 25% சதவீதம் கட்டண சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

இதனை GST உள்ளிட்ட வரிகள் கணக்கிடும்போது சராசரி கட்டணத்திற்கு சமமாக கூடுதல் கட்டண செலுத்த வேண்டி உள்ளது.

இதனால் இவர்களுக்கு 75% கட்டண சலுகை வழங்கிட வேண்டுகிறோம்.

கோரிக்கை 8: ( மாற்றுத்திறனாளிகளின் மகள் / மகன்)

அரசு பணிகளில் இட ஒதுக்கீடு, பொறியியல் படிப்பு,மருத்துவ படிப்பு மற்றும் பள்ளி, கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு வழங்கிட கேட்டுக்கொள்கிறோம்.

கோரிக்கை 9.

இந்து சமய அறநிலைக்கு உட்பட்ட பழனி பாலதண்டாயுதபாணி கோயில் திருச்செந்தூர் முருகன் கோயில் உள்ளிட்ட அறநிலைக்கு துறைக்கு உட்பட்ட பல்வேறு கோயில்களில் மாற்றுத்திறனாளிகள் தரிசனத்திற்கு செல்லும் போது கோவிலுக்கு சொந்தமான விடுதிகளில் முற்றிலும் இலவசமாக தங்கி தரிசனம் செய்ய சட்டசபையில் வலியுறுத்த வேண்டுகிறோம்.

கோரிக்கை 10 :

வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ஆணை மூலமாகவும் தேர்வு செய்யப்பட்டு,

அரசு பணிகளில் கடந்த பல ஆண்டு காலமாக தங்களது வயது மூப்பினை இழந்து, தொகுப்பு ஊதியம் அடிப்படையிலும், தினக்கூலி அடிப்படையிலும் பணியாற்றி வரும் மாற்றுத்திறனாளிகளை அரசாணை நிலை எண் 151 படி பணி நியமனச் செய்ய வேண்டுகிறோம்.

மேற்கண்ட கோரிக்கைகளை முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் நிறைவேற்றுமாறு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.







வேளச்சேரி மேற்கு பகுதி, 176 வது வட்டத்தைச் சேர்ந்த பகுதி பிரதிநிதி எம்.ஆர்.அபிமன்னன், 178 வது வட்டக் கழக துணைச் செயலாளர் மனோகரன், 178 வது வட்டத்தைச் சேர்ந்த பகுதிப் பிரதிநிதி ஆர்.சிவா ஆகியோர் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேனாள் அமைச்சர், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் உடல்நலம் குறித்து விசாரித்து நிதியுதவி தலா ரூ.50,000 வழங்கினார். இதில் பகுதிப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, மாவட்ட பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி, நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கழக த.ரமேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.சண்முகநாதன், வேளச்சேரி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எஸ்.தியாகராஜன், வட்டச் செயலாளர்கள் த.பார்த்திபன், தே.கோபி, கே.என்.தாமோதரன், பொ.த.மதிவாணன், ஜி.பி.எஸ்.பாலசதீஷ், க.பாரதிதாசன், வி.சக்திவேல் மற்றும் கழக நிர்வாகள் பலர் உள்ளனர்.

### பி.கே.சேகர்பாபு – ஜோசப் சாமுவேல் முன்னிலை! அம்பத்தூர் இரா. நாதன் துணைவியார்

# ரங்கநாயகி (எ) கோவிந்தம்மாள் திருவுருவப் படத்திறப்பு!

## டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி – அன்பகம் கலை – டி.கே.எஸ்.இளங்கோவன் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, செப்.2-

அம்பத்தூர் நகர முன்னாள் செயலாளரும் முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.இரா. நாதன் மனைவியும் சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி ஆ. இரா.அருண் தயாருமான ரங்கநாயகி என்கிற கோவிந்தம்மாள் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு இன்று (02.09.2026 புதன்கிழமை) நடைபெற உள்ளது.

மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் தொகுதி செயலாளர் பி.கே. சேகர்பாபு அவர்கள் தலைமையில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினரும் ஏழாவது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால், அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ், 80



வது வட்ட செயலாளர் வெ.ராதாகிருஷ்ணன் மாவட்ட பிரதிநிதி பொன் நவராஜ் ரவி, எம்.எ.ஜீவா ஆகியோரின் முன்னிலையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் மறைந்த அம்மையாரின் திருவுருவப்படத்தை திறந்து வைக்க உள்ளார்.

விழாவிற்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக அமைப்பு துணைச் செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு. நாசர், கழக ஆதிதிராவிட நல உரிமை அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியாராஜன் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆவடி மாநகர செயலாளர் சன்.பிரகாஷ் மற்றும் மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன், இ.பரந்தாமன், பா.தாயகம் கவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், திருமதி சங்கரி நாராயணன், மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, பூவை ஜெரால்டு, கன்னிகை ஜி ஸ்டாலின், மதுரை இளமகிழன், பரிதி இளம்சுருதி,

பகுதி செயலாளர்கள், ஐசி எஃப் வ.முரளிதரன் கூ.பி. ஜெயின், மாவட்ட நிர்வாகிகள் வி.ரமேஷ் நீலகண்டன், டாக்டர் ஏபி பூர்ணிமா, எல்.பி.எப்.மோகன், டாக்டர் ஜி.சந்தகுமாரி, து.ஆயிரம், துரை வீரமணி, புழல் எம்.நாராயணன், பூவை அப்பர் ஸ்டாலின், மாமன்ற உறுப்பினர்கள் பொற்கொடி கண்ணபிரான், உஷா நாகராஜ், உமா சந்தானம், கே சாரதா, அம்பத்தூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் திராவிட செல்வம், க. முரளி பாபு, எம்.கதிஜா மா.ரமேஷ்,

வட்ட செயலாளர்கள் வே.ரவீந்திரன், பு.வீரா என்கிற வீரராகவன் மூ.ரகு த. கண்ணபிரான் எம்கமல் மு.சண்முகம் எ.சுந்தரராஜ் மு.விஜயகுமார் எஸ். மோகன்குமார் த.வ.லால், சி.சீனிவாசன் த.பிரகாஷ்குமார் எம்.இ.சேகர் நா.நெப்போலியன், இரா.டீக்கா அம்பத்தூர் பகுதி மாவட்ட பிரதிநிதிகள் மு.குணசேகரன் ப.மதி மா.குப்புசாமி க.ஜீவா எஸ்.பி.அரிகிருஷ்ணன் எம்.அரிகிருஷ்ணன் கோ.சேகர்லால் பி.வி. மூர்த்தி இரவைபிரபு, த. தமிழ்ச்செல்வி ம.சீனிவாசன் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் கலந்து கொள்கிறார்கள்.

இறுதியாக முன்னாள் வட்ட செயலாளர் த.தணிகைநாதன், பொன்.மகேந்திரகுமார் அ.மணிமொழி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.